பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
26 06 2024 **WEDNESDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

- மியான்மரில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்படுவதற்கான நடவடிக்கைகளில் இந்தியா பக்கபலமாக இருக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

- நடப்பு நிதியாண்டில் தில்லியில் நான்கரை கோடி மரங்களை நட காற்று தர மேலாண்மை ஆணையம் முடிவு செய்துள்ளது

- சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த தமிழக அரசு தயங்குவது ஏன் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்

- நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளராக நெதர்லாந்தைச் சேர்ந்த திரு. Mark Rutte-வை நியமனம் செய்ய வடக்கு அட்லாண்டிக் கவுன்சில் முடிவு செய்துள்ளது.

- பாரிஸ் ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் மற்றும் Dhinidhi Desinghu தகுதி பெற்றுள்ளனர்.

**>>>><<<<**

மியான்மர் எல்லைப்பகுதியில் தொடர்ந்து வரும் வன்முறை சம்பவங்கள் குறித்து, இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

மியான்மர் நாட்டின் துணைப்பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான திரு. U Than Shwe புதுதில்லியில் இன்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

இச்சூழலுக்கு தீர்வு காண அனைத்து உதவிகளையும் செய்ய இந்தியா தயாராக இருப்பதாக அவரிடம் திரு. ஜெய்சங்கர் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பு தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், போதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் ஆள் கடத்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இரு நாடுகளும் தீவிரம் காட்ட வேண்டும் என்று வலியுறுத்தியதாக தெரிவித்துள்ளார்.

மியான்மரில் மீண்டும் ஜனநாயக ஆட்சி மலர வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளில் இந்தியா பக்கபலமாக இருக்கும் என்றும் மியான்மர் வெளியுறவு அமைச்சரிடம் தெரிவித்ததாக திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

மேற்கத்திய ஆப்பிரிக்க நாடான Benin மற்றும் இந்தியா இடையிலான இருதரப்பு உறவு மேலும் வலுவடைந்திருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருநாடுகளின் வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் நிலையிலான ஆலோசனைக் கூட்டம் நேற்றும் இன்றும் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை அன்று Benin நாட்டின் Contonou-வில் நடைபெற்றது.

இதுதொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருநாடுகளுக்கு இடையேயான அரசியல், வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஓம் பிர்லாவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் மக்களவை சிறப்பாக செயல்பட, திரு. ஓம் பிர்லாவின் அனுபவமும் அறிவாற்றலும் துணைநிற்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையிலான திரு. ஓம் பிர்லாவின் செயல்பாடு இந்திய அரசியலமைப்பின் பெருமையை வெளிப்படுத்துவதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

>>>><<<<

நடப்பு நிதியாண்டில் தில்லியில் நான்கரை கோடி மரங்களை நட காற்று தர மேலாண்மை ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அந்த ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், காற்று மாசை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த நிதியாண்டில் 3 கோடியே 60 லட்சம் மரங்கள் நடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசுமை சூழலை அதிகப்படுத்தும் நோக்கில் கல்வி நிறுவனங்கள், வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களில் மரங்கள் நடுவதை ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளது.

சாலையோரப் பகுதிகளில் மரங்களை நட வேண்டும் என்று ஒப்பந்த நிறுவனங்களிடம் வலியுறுத்தியிருப்பதாகவும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

>>>><<<<

மகாராஷ்ட்ராவில் முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே அழைப்பு விடுத்த தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கவுள்ளதை ஒட்டி, இந்த தேநீர் விருந்து நிகழ்ச்சிக்கு அம்மாநில முதலமைச்சர் அழைப்பு விடுத்திருந்தார்.

இருப்பினும், மக்களின் பிரச்சினைகளுக்கு மாநில அரசு தீர்வு காண தவறிவிட்டதாக கூறி, இந்த நிகழ்ச்சியை புறக்கணிப்பதாக எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

விரைவில் மகாராஷ்ட்ராவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தற்போதைய அவையின் இறுதி கூட்டத்தொடராக இது அமைந்துள்ளது.

>>>><<<<

நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இன்று சென்னையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, நடப்பாண்டில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையுடன், சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு 105 ரூபாயும், சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 130 ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஊக்கத்தொகை வழங்குவது செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை மாநில அரசே நடத்த முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தயங்குவது ஏன் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், முந்தைய அஇஅதிமுக அரசால் நியமிக்கப்பட்ட குலசேகரன் ஆணையத்திற்கு திமுக அரசு ஆறு மாத காலம் நீட்டிப்பு வழங்கியிருந்தாலே, சாதிவாரி கணக்கெடுப்பு தற்போது முடிவடைந்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆணையத்திற்கு திமுக அரசு நீட்டிப்பு வழங்காதது ஏன் என்றும் திரு. அண்ணாமலை வினவியுள்ளார்.

>>>><<<<

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

திமுக, பாமக, நாம் தமிழர் கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 29 பேர் களத்தில் உள்ளனர்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அங்குள்ள தோடா மாவட்டத்தின் Sinoo கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்புப் படையினர் அங்கு சோதனை நடத்தியபோது, அவர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது மேற்கொண்ட பதில் தாக்குதலில், ஒரு தீவிரவாதி உயிரிழந்ததாகவும், தொடர்ந்து இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, லக்னோவில் இன்று நடைபெற்ற இதுதொடர்பான கருத்தரங்கில் பேசிய அம்மாநில அமைச்சர் திரு. ராகேஷ் சச்சன் இதனை தெரிவித்தார்.

உத்தரபிரதேசத்தை ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரமாக மாற்றுவதில் இந்நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் தற்போது அம்மாநிலத்தில் 96 லட்சம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

கேரளா, கோவா மற்றும் கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளில் நாளையும் நாளை மறுநாளும் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளாவின் பத்தனம்திட்டா, எர்ணாகுளம், இடுக்கி, கோழிக்கோடு, வயநாடு, கன்னூர், காசர்கோடு மாவட்டங்களில் கன முதல் அதிகனமழை வரை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அம்மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வரும் நிலையில், சில இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், தெலங்கானா, ராயலசீமா, ஏனாம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் கடலோரப் பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு பரவலாக லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>><<<<

அஸ்ஸாமில் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளில் வெள்ளம் சூழப்பட்டுள்ளதன் காரணமாக, ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

Barpeta, Cachar, Darrang, Dhemaji, Goalpara, Kamrup மற்றும் Karamjanj பகுதிகள் வெள்ளத்தால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

>>>><<<<

நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளராக நெதர்லாந்தைச் சேர்ந்த திரு. Mark Rutte-வை நியமனம் செய்ய வடக்கு அட்லாண்டிக் கவுன்சில் முடிவு செய்துள்ளது

தற்போது நெதர்லாந்து பிரதமராக இருந்து வரும் அவரது பதவிக்காலம் விரைவில் முடிவடையவுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது .

அவருக்கு நேட்டோவின் 32 உறுப்பு நாடுகளும் ஆதரவு அளித்துள்ளதாக நேட்டோவின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்நிலையில் கடந்த வாரம் இப்பதவிக்கான போட்டியிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக ருமேனிய அதிபர் திரு. Klaus Iohannis தெரிவித்திருந்தார்.

>>>><<<<

சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் 100வது நாடாக பராகுவே இணைந்துள்ளது.

இந்தியாவுக்கான பராகுவே தூதர் திரு. Fleming Raul மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் இணைச்செயலர் திரு. அபிஷேக் சிங் இடையே புதுதில்லியில் இன்று நடைபெற்ற சந்திப்பை அடுத்து, இதனை அந்த அமைச்சகம் அறிவித்துள்ளது

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் மற்றும் Dhinidhi Desinghu தகுதி பெற்றுள்ளனர்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Harman Preet Singh தலைமையிலான இந்த அணியில் 16 பேர் இடம்பெற்றுள்ளனர்.

Sreejesh அணியின் கோல் கீப்பராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

>>>><<<<

ஆசிய இளையோர் மல்யுத்த போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 48 கிலோ எடைப்பிரிவில் Vishal Harishchandra Shilimkar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் Anuj Kumar–ம், 60 கிலோ எடைப்பிரிவில் Sitender-ம், 92 கிலோ எடைப்பிரிவில் Arjun Ruhil-ம், 110 கிலோ எடைப்பிரிவில் Jaspooran Singh-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் ஜூடோ போட்டியில் பங்கேற்க இந்தியாவின் Tulika Maan தகுதி பெற்றுள்ளார்.

>>>><<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்கான 31 பேர் கொண்ட உத்தேச இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணிக்கான பயிற்சி முகாம், ஸ்ரீநகரில் அடுத்த மாதம் 8ஆம் தேதி முதல் நடைபெறவுள்ளது.

ஏழு நாடுகள் பங்கேற்கும் இப்போட்டி பூட்டானில் செப்டம்பர் மாதம் 18ஆம் தேதி தொடங்கி, 28ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>END<<<<